# PRE-BOARD EXAMINATION – 2020-21
## SUBJECT – TAMIL 2L - STANDARD

**Class: X (CBSE)** **Total Marks: 80**
**Date: …………………….** **Time: 3 hours**

---

**General Instructions:**
- All Questions are compulsory.
- Marks are indicated against each question.
- Please check this question paper contains **20** printed pages only.

**இக்கேள்வித்தாள் இரண்டுபகுதிகளைக் கொண்டது:**
**This question paper is divided into two parts:**

### PART – A (MCQ - 40 MARKS) (பகுதி -அ)

| | | |
|---|---|---|
| I. | படித்தல் (UNSEEN) (பொது) | 10மதிப்பெண்கள் |
| II. | இலக்கணம் | 16மதிப்பெண்கள் |
| III. | படித்தல் (இலக்கியம்) (உரைநடை, செய்யுள், திருக்குறள்) | 14 மதிப்பெண்கள் |

### PART – B (DESCRIPTIVE - 40 MARKS) (பகுதி-ஆ)

| | | |
|---|---|---|
| IV. | சிறுவினா/பெருவினா (செய்யுள், உரைநடை) | 18மதிப்பெண்கள் |
| V. | நெடுவினா (துணைப்பாடம்) | 7மதிப்பெண்கள் |
| VI. | படவிளக்கம், கடிதம், கட்டுரை | 15மதிப்பெண்கள் |

---

**குறிப்பு**

தெளிவான கையெழுத்து, ஏற்ற விடைகளை எழுத்துப் பிழைகள் சொற்பிழைகள் இல்லாமல் எழுதுதல், மேற்கோள்கள், சிறந்த தமிழ்நடையுடன் எழுதப்படும் விடைத்தாள்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற வழி செய்யும்.

### பகுதி - அ
### I.(படித்தல்: உரைநடைப்பகுதி(பொது)

**1.** பின்வரும் பத்தியைப் படிக்கவும்.இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத்

**<u>தேர்ந்தெடுத்து எழுதுக:</u>** **(5X1=5)**

மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவினையும் சுயவலிமையையும் தருவது கல்வி. அண்ணல் காந்தியடிகள் கல்வியைப் பற்றி கூறும் போது, "குழந்தைகளிடம் உடல், உள்ளம், ஆன்ம உணர்வு ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒருங்கே வெளிக்கொணர்வது தான் கல்வி என நம்புகிறேன்" என்றார். கல்வி "வாழ்வின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் விளங்குவது" எனக் கல்வியின் சிறப்புரைப்பார் அரிஸ்டாட்டில். நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையையும் ஆன்மீக நெறியையும் கற்பிப்பது கல்வி என மொழிவார் டாக்டர் இராதாகிருஷ்ணன். இயற்கையை எதிர்த்து வாழ வேண்டிய மனிதனுக்குக் கூரிய அறிவும் சீரிய உணர்வும் மிகுந்த தேவையாயிற்று. எனவே தனக்கு வேண்டிய அறிவை இயற்கையிடமிருந்தே கற்றான். எனவே மனிதனின் முதல் ஆசிரியர் இயற்கையே.

சங்க காலத்தில் கல்வி நிறுவனங்கள் பள்ளிகள் என்னும் பெயரில் எந்த இலக்கியத்திலும் இல்லை. அதற்கு இணையாக மன்றம் என்ற பெயரில் இயங்கி வந்தன. சங்ககாலத்தில் ஊர்ப் பொதுமன்றங்கள், பலர் கூடி வாதிடவும் கல்வி கற்கவும் பயன்படுத்தப் பெற்றிருந்தது. சங்ககாலப் புலவர்கள் பலர் ஆசிரியர்களாக விளங்கியுள்ளனர். கற்றவருக்குத் தம் நாடும் ஊருமேயன்றி அனைத்து நாடுகளும் ஊர்களும் சொந்தமாகும் என்பார் திருவள்ளுவர். பாசம் மிகுந்த தாயும் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கும் மகனையே பெரிதும் விரும்புவாள் என்று புறநானூற்றில் கூறியுள்ளார் பாண்டியன் நெடுஞ்செழியன். "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறார் அதிவீரராம பாண்டியர்.

**<u>வினாக்கள்:</u>**

(i) "நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையையும் ஆன்மீக நெறியையும் கற்பிப்பது கல்வி" - என்று கூறியவர் யார்?

(அ) காமராசர்

(ஆ காந்தியடிகள்

(இ) டாக்டர் இராதாகிருஷ்ணன்.

(ஈ) அரிஸ்டாட்டில்

(ii) மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும்

விரிந்த அறிவினையும் சுயவலிமையையும் தருவது எது?

(அ) கல்வி

(ஆ) புகழ்

(இ) பணம்

(ஈ) குணம்

(iii) மனிதனின் முதல் ஆசிரியர்

(அ) புலவர்

(ஆ) அரசர்

(இ) அன்னை

(ஈ) இயற்கை

(iv) சங்க காலத்தில் கல்வி நிறுவனங்கள் எப்பெயரில் வழங்கப்பட்டது?

(அ) பள்ளி

(ஆ) பாடசாலை

(இ) மன்றம்

(ஈ) சங்கம்

(v) 'கற்றவருக்குத் தம் நாடும் ஊருமேயன்றி அனைத்து நாடுகளும் ஊர்களும் சொந்தமாகும்' - இது யாருடைய கூற்று?

(அ) திருவள்ளுவர்

(ஆ) கணியன் பூங்குன்றனார்

(இ) பாண்டியன் நெடுஞ்செழியன்

(ஈ) அதிவீரராம பாண்டியர்

## (அல்லது)

உலகின் மிக சுவாரஸ்யமான நுணுக்கமான உயிரினம் தேனீ. உலகின் மிகச் சிறந்த மகரந்த சேர்க்கையாளர். உலகின் **80** சதவிகித உணவுப்பொருட்களின் பெருக்கத்திற்குக் காரணமாக இருக்கிறது. கூர்மையான ஞாபகசக்தி கொண்டவை.

ஒட்டு மொத்த மக்கள் தொகையாலும் பூமிக்கு விளையாத நன்மை, ஒரே ஒரு தேனீயால் விளையும். தேனீக்களின் பொறியியல் அறிவு அபாரமானது. தேன்கூட்டை அறுங்கோண வடிவத்தில் கட்டும். தேனீயிடமிருந்து வரும் ரீங்கார ஓசை, அதன் இறகுகளின் மிக விரைவான துடிப்பால் தான் ஏற்படுகிறது. அதன் இறகுகள் நொடிக்கு

நானூறு முறை துடிக்கிறது.

சமூக வாழ்க்கை நடத்தும் தேனீக்களின் கூட்டில் ஒரே ஒரு இராணித் தேனீ தான் இருக்கும். அந்தக்கூட்டில் அது தான் சர்வாதிகாரி. கூட்டில் இன்னும் இரண்டு வகை தேனீக்களும் இருக்கும். கூட்டை நிலைக்கச் செய்வதற்காகப் பாடுபடும் ஒரு வகை. இன்னொரு வகை தேனீக்கள் சோம்பேறியான ஆண் தேனீக்கள். இராணித் தேனீ மற்ற தேனீக்களை விட உருவத்தில் பெரியதாக இருக்கும். வேலைக்காரியான தேனீக்கள் தான் தேனும் மகரந்தப் பொடியும் சேகரிக்கும். மெழுகால் கூடு கட்டுவது, கூட்டைச் சுத்தப்படுத்துவது, குஞ்சுகளுக்கு உணவு கொடுப்பது முதலான பல வேலைகளையும் பெண் தேனீக்கள் தான் செய்கின்றன.

**<u>வினாக்கள்:</u>**

(i) தேனீக்கள் தேன்கூட்டை எந்த வடிவத்தில் கட்டும்?

- (அ) வட்ட வடிவத்தில்
- (ஆ) முக்கோண வடிவத்தில்
- (இ) அறுங்கோண வடிவத்தில்
- (ஈ) .சதுர வடிவத்தில்

(ii) தேனீக்களின் இறகுகள் நொடிக்கு எத்தனை முறை துடிக்கிறது?

- (அ) 100
- (ஆ) 400
- (இ) 500
- (ஈ) 800

(iii) தேனீக்கள் கூட்டில் சர்வாதிகாரி யார்?

- (அ) இராணித் தேனீ
- (ஆ) இராஜாத் தேனீ
- (இ) ஆண் தேனீ
- (ஈ) பெண் தேனீ

(iv) தேனீக்களின் அபாரமான அறிவு

- (அ) வணிக அறிவு
- (ஆ) அறிவியல்அறிவு

(இ) பொறியியல்அறிவு

(ஈ) கணித அறிவு

(v) பெண் தேனீக்கள் செய்யும் வேலை

(அ) மகரந்தப் பொடியும் சேகரித்தல்

(ஆ) மெழுகால் கூடு கட்டுதல்

(இ) குஞ்சுகளுக்கு உணவு கொடுத்தல்

(ஈ) அனைத்தும் பொருந்தும்

---------------------------------------------------------

**2.** <u>**கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**</u>

**(5X1=5)**

உலகின் பழமையான நாகரிகங்களில் குறிப்பிடத்தக்கது சிந்து சமவெளி நாகரிகம். இமயமலையில் தோன்றிப் பெருகி ஓடி அரபிக்கடலில் கலக்கும் பெருநதியான சிந்துநதியின் பள்ளத்தாக்குகளிலும், அந்நீரால் வளமாக இருந்த சமவெளிப் பகுதிகளிலும் சுமார் **5000** ஆண்டுகளுக்கு முன்பே செழித்துத் தழைத்து இருந்தது சிந்து சமவெளி நாகரிகம். இந்த நிலப்பரப்பானது தற்போதைய பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் வடமேற்கு பகுதியாகும். இங்கு வாழ்ந்த நம் முன்னோர்கள் பண்டைய காலத்திலேயே விவசாயம் செய்தும், சுட்ட செங்கற்களால் வீடு கட்டியும், ஆடை அணிகலன்கள் அணிந்தும் வாழ்ந்துள்ளனர். இன்றளவும் உலக அளவில் நீண்ட கலாசாரமும் பாரம்பரியமும் மற்றும் பண்பாடும் கொண்ட பழம்பெரும் பூமி என்று பாரதம் புகழப்படுவதற்குச் சிந்து சமவெளி நாகரிகமே முக்கிய காரணம் ஆகும்.

கி.பி. **1842** ஆம் ஆண்டு சார்லஸ் மேசன் என்பவர் செய்த அகழ்வு ஆராய்ச்சியின் போது வெளிப்பட்ட முதல் புராதன நகரம் ஹரப்பா ஆகும். அதனால் ஹரப்பன் நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. கி.பி. **1921** மற்றும் **1922** ஆம் ஆண்டுகளில் சர்.ஜான் மார்ஷல், ராய் பஹதூர் தயாராம், மற்றும் மாதே ஸ்வருப் போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் பயனாக மற்றொரு புராதன நகரமாகிய மொஹஞ்சதாரோ வெளிப்பட்டது. கி.மு.3300 முதல் கி.மு.**1300** வரையுள்ள சுமார் **2000** ஆண்டுகள் பெரும் செல்வாக்குடன் சிந்து சமவெளி நாகரிகம் திகழ்ந்துள்ளது.

<u>**வினாக்கள்:**</u>

(i) சிந்து நதி எங்கு தோன்றுகிறது?

(அ) பொதிகை மலையில்

(ஆ இமயமலையில்

(இ) உதகைமலையில்

(ஈ) சேர்வராயன் மலையில்

(ii) உலகின் பழமையான நாகரிகங்களுள் ஒன்று

(அ) ஆரிய நாகரிகம்

(ஆ) திராவிட நாகரிகம்

(இ) அரேபிய நாகரிகம்

(ஈ) சிந்து சமவெளி நாகரிகம்

(iii) உலக அளவில் நீண்ட கலாசாரமும் பாரம்பரியமும் மற்றும் பண்பாடும் கொண்ட பழம்பெரும் பூமி எது?

(அ) எகிப்து

(ஆ) கிரேக்கம்

(இ) பாரதம்

(ஈ) இலங்கை

(iv) சிந்து சமவெளி நாகரிகம் எத்தனை ஆண்டுகள் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தது?

(அ) **5000**

(ஆ) **1000**

(இ) **2000**

(ஈ) **1300**

(v) அகழ்வாராய்ச்சியின் போது முதலில் வெளிப்பட்ட புராதன நகரம்

(அ) மொஹஞ்சதாரோ

(ஆ) தமிழ்நாடு

(இ) ஹரப்பா

(ஈ) குஜராத்

## (அல்லது)

12,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மனிதனால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு, நாய் மட்டுமே. மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லப்படும் கால்நடைகள் சிதறிவிடாமல் கண்காணிக்கவும் நரி,

ஓநாய், போன்ற விலங்குகளால் வேட்டையாடப்படாமல் கண்காணிக்கவும் நாய்கள் உதவின. நாய்கள் ஓநாய்களின்

வம்சாவளியைச் சேர்ந்தவை. உலகில் 150க்கும் மேற்பட்ட வகைகளில் நாய்கள்

உள்ளன. வேட்டையாடப் பயன்படும் நாய்கள் பாயின்டர்ஸ், ஸ்பேனியல்ஸ், ரிட்ரீவர்ஸ் போன்றவை ஆகும். புதர்களில் மறைந்திருக்கும் விலங்குகள், பறவைகள் போன்றவற்றைக் கண்டறிய 'பாயின்டர்ஸ்' உதவுகின்றன. புதர்களில் மறைந்திருக்கும் விலங்குகளையும், பறவைகளையும் தன் குரைத்தல் ஒலி மூலம் சிதறடிக்க 'ஸ்பேனியல்ஸ்' வகை நாய்கள் உதவுகின்றன. மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட விலங்குகளையும், பறவைகளையும் தமது வாயால் கவ்விக் கொண்டு வருபவை 'ரிட்ரீவர்ஸ்' வகை நாய்கள் ஆகும்.

விலங்குகளிலே மிகவும் நன்றி உள்ள விலங்கு நாய் மட்டுமே. அவற்றின் புத்திசாலித்தனமும் கூர்மையான மோப்ப சக்தியும் அயராத உழைப்பும் மனிதர்களுக்குப் பல வகைகளில் உதவுகின்றன. விண்வெளியில் பயணம் செய்த முதல் உயிரினமே 'லைக்கா' என்னும் நாய் தான். நாய்களின் கண் இமைகளிலும் உதட்டின் மேல் பகுதியிலும் உள்ள முடிகள் காற்றில் ஏற்படும் ஒரு சிறிய மாறுபாட்டைக் கூட நாய்களுக்கு உணர்த்தும் 'சென்ஸார்' களாக செயல்படுகின்றன.

நன்கு வளர்ந்த நாய்களுக்கு 42 பற்கள் வரை இருக்கும்.

**<u>வினாக்கள்:</u>**

(i) மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட விலங்குகளையும், பறவைகளையும் தமது வாயால் கவ்விக் கொண்டு வரும் நாய்

(அ) பாயின்டர்ஸ்
(ஆ ரிட்ரீவர்ஸ்
(இ) ஸ்பேனியல்ஸ்
(ஈ) லைக்கா

(ii) காற்றில் ஏற்படும் ஒரு சிறிய மாறுபாட்டைக் கூட நாய்களுக்கு உணர்த்துவது

(அ) நாய்களின் கண் இமைகளிலும் உதட்டின் மேல் பகுதியிலும் உள்ள முடிகள்
(ஆ) நாய்களின் கண் இமைகளிலும் கால்களிலும் உள்ள முடிகள்
(இ) நாய்களின் தலையிலும் உதட்டிலும் உள்ள முடிகள்
(ஈ) நாய்களின் கண் இமைகளிலும் உதட்டின் கீழ்ப் பகுதியிலும் உள்ள முடிகள்

(iii) 'ஸ்பேனியல்ஸ்' வகை நாய்கள் புதர்களில் மறைந்திருக்கும் விலங்குகளையும், பறவைகளையும் தன் ---------------------------- மூலம் சிதறடிக்கும்.

(அ) கத்தல் ஒலி

(ஆ) கதறல் ஒலி

(இ) பிளிறல் ஒலி

(ஈ) குரைத்தல் ஒலி

(iv) நாய்கள் எந்த வம்சாவளியைச் சேர்ந்தவை?

(அ) ஓநாய்களின்

(ஆ) பூனைகளின்

(இ) புலிகளின்

(ஈ) கரடிகளின்

(v) உலகில் எத்தனை வகை நாய்கள் உள்ளன?

(அ) 44

(ஆ) 120

(இ) 150

(ஈ) 1200

## II. (<u>இலக்கணம்</u>)

**3.** <u>சான்று தருக:</u> **(எவையேனும் நான்கினுக்கு மட்டும்)** **(4X1=4)**

(i) முன்பனிக்காலம்

(அ) மாசி, பங்குனி

(ஆ) மார்கழி, தை

(இ) ஆனி, ஆடி

(ஈ) சித்திரை, வைகாசி

(ii) பொது மொழி

(அ) கண்

(ஆ) படம் பார்த்தான்

(இ) வேங்கை

(ஈ) பூ

(iii) திணை வழாநிலை

(அ) செல்வன் வந்தது

(ஆ) செல்வன் வந்தாள்

(இ) செல்வன் வந்தான்

(ஈ) செல்வன் வந்தன

(iv) எதிர்கால வினையாலணையும் பெயர்

(அ) பெற்றானை

(ஆ) பெறுகின்றானை

(இ) பெறுவானை

(ஈ) பெற்ற

(v) கொண்டு கூட்டுப் பொருள்கோள்

(அ) களிறும் கந்தும் போல அளிகடல்
கூம்பும் கலனும் தோன்றும்

(ஆ) சுரையாழ அம்மி மிதப்ப - வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

(இ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(ஈ) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்

**4.** **<u>கூறியவாறு செய்க:</u>** **(நான்கிற்கு மட்டும்)** **(4X1=4)**

(i) கெடுதல் **(முதனிலை திரிந்த தொழிற்பெயராக்கு)**

(அ) கேடு

(ஆ) கெடு

(இ) கேடுதல்

(ஈ) கெட்டு

(ii) யாமம் **(எந்நிலத்திற்குரிய சிறுபொழுது?)**

(அ) மருதம்

(ஆ) முல்லை

(இ) நெய்தல்

(ஈ) குறிஞ்சி

(iii) மரம் **(இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்கு)**

(அ) உயர்ந்த மரம்

(ஆ) குட்டை மரம்

(இ) பழைய மரம்

(ஈ) பனை மரம்

(iv) அங்கே அசைவது பாம்போ? கயிறோ? **(எவ்வகை வினா?)**

(அ) அறிவினா

(ஆ) கொளல்வினா

(இ) ஏவல்வினா

(ஈ) ஐயவினா

(v) எடுப்பதும் **(அளபெடையாக்கு)**

(அ) ஏடுப்பதும்

(ஆ) எடுப்பதூம்

(இ) எடுப்பதூஉம்

(ஈ) எடுப்பது

**5. <u>இலக்கணக்குறிப்புத் தருக:</u> (நான்கினுக்கு மட்டும்) (4X1=4)**

(i) கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதில் பட வேண்டும் - பாரதியார்

(அ) திணை வழுவமைதி

(ஆ) மரபு வழுவமைதி

(இ) கால வழுவமைதி

(ஈ) பால் வழுவமைதி

(ii) சுரமும் சுரம் சார்ந்த இடமும்

(அ) குறிஞ்சி

(ஆ) முல்லை

(இ) பாலை

(ஈ) நெய்தல்

(iii) தேடிப் பார்த்தான்

(அ) பெயரெச்சத் தொடர்

(ஆ) வினையெச்சத் தொடர்

(இ) இடைச்சொல் தொடர்

(ஈ) உரிச்சொல் தொடர்

(iv) அலைகடல்

(அ) பண்புத்தொகை

(ஆ) வினைத்தொகை

(இ) உவமைத்தொகை

(ஈ) உம்மைத்தொகை

(v) தொழாஅள்

(அ) செய்யுளிசை அளபெடை

(ஆ) இன்னிசை அளபெடை

(இ) ஒற்றளபெடை

(ஈ) சொல்லிசை அளபெடை

**6. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>** **(4X1=4)**

(i) நெய்தல் திணைக்குரிய விலங்கு

(அ) புலி, கரடி, சிங்கம்

(ஆ) முயல், மான், புலி

(இ) எருமை, நீர்நாய்

(ஈ) முதலை, சுறா

(ii) ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை உறுவது உரைத்தல் விடை, இனமொழி விடை ஆகிய ஐந்தும்குறிப்பாக இருப்பதால் --------------------- விடைகள் எனப்படும்.

(அ) வெளிப்படை

(ஆ) மறைமுக

(இ) குறிப்பு

(ஈ) எதிர்மறை

(iii) செய்யுளிசை அளபெடையை ----------------------------- என்றும் கூறுவர்.

(அ) இன்னிசை அளபெடை

(ஆ) இசைநிறை அளபெடை

(இ) சொல்லிசை அளபெடை

(ஈ) ஒற்றளபெடை

(iv) நிலமும் பொழுதும் ---------------- எனப்படும்.

(அ) முதற்பொருள்

(ஆ) கருப்பொருள்

(இ) உரிப்பொருள்

(ஈ) புறப்பொருள்

--------------------------------------------------------

## III. (<u>இலக்கியம்</u>)

## (படித்தல்: <u>உரைநடைப்பகுதி, செய்யுள், திருக்குறள்</u>)

**7. <u>பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக:</u> (5X1=5)**

மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகள் கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன; ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன; சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன; சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை. பன்னெடுங்காலமாக விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். பித்தளை செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம். இதற்கு நையாண்டி மேள இசையும் நாதசுரம், தவில், பம்பை இசைக் கருவிகளும் இசைக்கப்படுகின்றன.

கரகாட்டத்தின் துணையாட்டமாக ஆடப்படுவது மயிலாட்டம். நையாண்டி மேளம் இசைக்க காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர். ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம். இந்த ஆட்டத்தில் குடம், சிங்கி, டோலக், தவில்,தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. காவடியாட்டம் இலங்கை, மலேசியா உட்பட்ட புலம் பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ஆடப்படுகிறது. “போலச்செய்தல்” பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரை ஆட்டமும் ஒன்று. இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றன.

**<u>வினாக்கள்:</u>**

(i) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை எவை?

(அ) சிற்பக்கலைகள்

(ஆ) நிகழ்கலைகள்

(இ) ஓவியக்கலைகள்

(ஈ) நாடகக்கலைகள்

(ii) பொய்க்கால் குதிரையாட்டமும் கேரளத்தில் -------------------- என்றும் அழைக்கப்படுகின்றன.

(அ) குதிரைக்களி

(ஆ) கச்சிகொடி

(இ) தப்பு ஆட்டம்

(ஈ) புலி ஆட்டம்

(iii) கரகாட்டத்தின் துணையாட்டமாக ஆடப்படும் ஆட்டம் எது?

(அ) தெருக்கூத்து

(ஆ) தேவராட்டம்

(இ) ஒயிலாட்டம்

(ஈ) மயிலாட்டம்

(iv) கரகாட்டத்திற்குத் தேவையான இசைக்கருவிகள்

(அ) நையாண்டி மேளம், நாதசுரம், தவில், பம்பை

(ஆ) நையாண்டி மேளம், சலங்கை, தோற்கருவி

(இ) குடம், சிங்கி, டோலக், தவில், தப்பு

(ஈ) தப்பட்டம், நாதசுரம், தவில், பம்பை

(v) ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடும் குழு ஆட்டம்

(அ) கரகாட்டம்

(ஆ) காவடியாட்டம்

(இ) ஒயிலாட்டம்.

(ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்

---

**8.** <u>**பின்வரும் செய்யுட் பகுதியைப் படித்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக:**</u> **(5X1=5)**

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

<u>**வினாக்கள்:**</u>

(i) இப்பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

(அ) கம்பராமாயணம்

(ஆ) நீதிவெண்பா

(இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

(ஈ) பூத்தொடுத்தல்

(ii) பொருள் எழுதுக: **வெய்யோன்**

(அ) சூரியன்

(ஆ) சந்திரன்

(இ) செவ்வாய்

(ஈ) நிலவு

(iii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

(அ) கா.ப. செய்குதம்பிப் பாவலர்

(ஆ) குமரகுருபரர்

(இ) சேக்கிழார்

(ஈ) கம்பர்

(iv) இப்பாடல் எக்காண்டத்தில் இடம் பெற்றுள்ளன?

(அ) பாலகாண்டம்

(ஆ) அயோத்தியா காண்டம்

(இ) யுத்த காண்டம்

(ஈ) சுந்தர காண்டம்

(v) ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவம் கொண்டவர் யார்?

(அ) இலட்சுமணன்

(ஆ) பரதன்

(இ) இராமன்

(ஈ) இராவணன்

**9. பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக:** **(4X1=4)**

(i) இன்மையின் **--------------** தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

(அ) அறிந்த

(ஆ) தாளாண்மை

(இ) இல்லாரை

(ஈ) இன்னாத

(ii) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் **--------------.**

(அ) செய்க

(ஆ) வினை

(இ) கருவியும்

(ஈ) அறனீனும்

(iii) செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
---------------- அறிந்து செயல்.

(அ) தியற்கை

(ஆ) இல்லார்

(இ) படாதவன்

(ஈ) திருவினை

(iv) பொருளல் லவரைப் பொருளாகச் -----------
பொருளல்ல தில்லை பொருள்.

(அ) குற்றம்

(ஆ) செய்யும்

(இ) பத்தடுத்த

(ஈ) தொழுகை

---------------------------------------------------------

## PART – B (DESCRIPTIVE - 40 MARKS) (பகுதி - ஆ)

## IV. (செய்யுள், உரைநடை)

**1. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைஎழுதுக:**
**(2X3=6)**

(i) இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை?

(ii) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்கு.

(iii) வித்துவக்கோட்டம்மாவிடம் குலசேகர ஆழ்வார் உரைப்பான யாவை?

(iv) ஒழுக்கத்தின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?

**2. பின்வரும்உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை எழுதுக:**
**(3X4=12)**

(i) தாவரங்களின் பூ, பிஞ்சு, குலை வகைகளுக்குத் தமிழில் உள்ள சொல்வளத்தை எழுதுக.

(ii) மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்கள் குறித்து எழுதுக.

(iii) விருந்தோம்பல் – அன்றும் இன்றும் என்பது குறித்து விவரி.

(iv) எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு செய்யப்போகும் மாற்றங்கள் யாவை?

(v) கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் - குறிப்பு வரைக.

## V. (நெடுவினா (துணைப்பாடம்)

**3. ஏதேனும் ஒரு துணைப்பாட வினாவிற்கு விளக்கமான விடை எழுதுக:** **(1x7=7)**

(i) 'பாய்ச்சல்' சிறுகதைச் சுருக்கம்.

(ii) 'விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை தரும்' பாடம்.

(iii) 'கோபல்லபுரத்து மக்கள் காட்டிய' மனித நேயம்.

## VI. (படவிளக்கம், கடிதம், கட்டுரை)

**4. படத்தைப் பார்த்து குறிப்பு எழுதுக.** **(1X3=3)**





**5. கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக:** **(1X6=6)**

(i) உழைப்பின் அவசியத்தை வலியுறுத்தி உன் தம்பிக்குக் கடிதம் எழுதுக.

(ii) உங்கள் பகுதில் உள்ள பூங்காவில் இலவச இணையவசதி அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சியர்க்குக் கடிதம் எழுதுக.

(iii) உங்கள் பகுதியில் அரசுப்பள்ளி அமைக்க வேண்டி ஆட்சித் தலைவருக்கு

மின்னஞ்சல் கடிதம் எழுதுக.

(உன் முகவரி : தமிழெழில்@ ஜி.மெயில்.காம்)

(எக்கடிதமாயினும் உமது முகவரி: செல்வன் \ செல்வி,

எண். 12, கம்பன் வீதி, ஆவடி, சென்னை–29 எனக் கொள்க)

**6.** **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:** **(1X6=6)**

(i) தலைப்பு -- முன்னுரை -- மின்சாரம் தயாரிப்பதில் பலவகை முறைகள் -- என்றும் கிடைக்கும் சூரியசக்தி -- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி -- மக்களுக்கு விழிப்புணர்வு -- தொழில் வளர்ச்சி -- பொருளாதாரத்தில் அதன் பங்கு -- முடிவுரை.

(ii) முன்னுரை -- மானுட மேன்மைக்கான வழிகள் -- தன்னம்பிக்கை முதற்படி -- ஓய்வில்லா உழைப்பு இரண்டாம்படி -- விடாமுயற்சி அடுத்தபடி -- செயலைத் திட்டமிட்டுச் செய்தல் -- முடிவுரை.

(iii) தலைப்பு -- முன்னுரை -- தூய்மை இந்தியா -- சுற்றுப்புறச்சூழல் தூய்மை -- தனி மனிதத் தூய்மை -- வீடு தூய்மையானால் நாடும் தூய்மை -- நோய்கள் வராமல் தடுக்க அரசு முயற்சிகள் -- மாசுநீக்கித் தூய்மை இந்தியாவைக் காண்போம் -- முடிவுரை.

---

**END**